# நல்லூர் பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 12 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய நல்லூர் பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களின் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய நல்லூர் பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் ரூபா 43,197,733 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2. கணககாய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை

(அ) ரூபா 5,768,614 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகளின் 39 ஆம் பிரிவின்படி இடர்கடன் ஆவணங்கள் மற்றும் காலாவதியான பட்டியலை பேணல், உத்தியோகத்தர் கொடுப்பனவு பட்டியலை வெளியிடுல், விளப்பரப்படுத்திய ஆதனங்களின் பட்டியல், என்பவற்றிற்காகவும் காலாவதியான மற்றும் ஏதாவது நிறுவனங்களிற்கு விற்பனை செய்வதற்காகவும் எழுதுனரை ஒதுக்குவதன் மூலம் புறப்பாக கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே உத்தியோகத்தர் கொடுப்பனவுக்கு வழங்கப்பட்ட தரகுக் கட்டணங்கள் ரூபா 305,960 வை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.3. இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 132(ஜே) ஆம் பிரிவு | ஒரு ஆண்டிற்கு ரூபா 1,000 க்கு மேற்பட்ட சமய மற்றும் பொது வேலைகள் மீதான செலவினத்திற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இதற்கு முரணாக அமைச்சரின் அங்கீகாரம் பெறாமல் சிற்றூண்டிச் செலவாக ரூபா 453,658 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 இன் பிரதே சபை நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| (i) அத்தியாயம் I பிரிவு 05 உபபிரிவு XII | காசு மற்றும் களஞ்சியங்களை கையாள்வதற்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து போதிய பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III பிரிவு 65 | கொடுப்பனவுக்காக அனுமதிக்கப்பட்ட காலத்தின் அனுபவத்தில் வருமான எழுதுனர் காலாவதியானோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு |

| | |
|---|---|
| | அதனை செயலாளருக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் III பிரிவு 66 | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(4) ஆம் பிரிவின்படி செயலாளர் ரூபா 5,611,399 தொகையான வரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் V இன் பிரிவு 140 | உரிய திகதிகளில் ரூபா 2,021,060 தொகையான முற்பணங்களை செலுத்த தவறியமைக்கு செயலாளர் ஊடாக தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) தாபனவிதிக் கோவை | |
| (i) அத்தியாயம் X பிரிவு 9.2 | வருமான மேற்பார்வையாளர் மற்றும் வருமான பரிசோதகரிற்கான விடுமுறைநாள் கொடுப்பனவு இந்த விதிக்கு முரணாக 20 நாட்களால் பிரிக்கப்ட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 15,162 ஆன தொகை செலுத்தப்பட்டடிருந்தது. |
| (ii) அத்தியாயம் XIV பிரிவு 3 | இந்த விதிக்கு முரணாக ஆடம்பர பஸ்சில் கொழுப்புக்கு பிரயாணம் செய்த உத்தியொகத்தர்களிற்கு பிரயாணக் கட்டணங்களாக ரூபா 3,030 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 3,839,804 ஆகும் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 61,954,464 ஆகும்.

## 2.2 நிதிக்கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில்லறை கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 5,192,891 தொகையான செலுத்த வேண்டியவைகள் இவ்வறிக்கைத் திகதிவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 113,743 தொகையான செயற்பாட்டு அபிவிருத்தி மானியங்கள் பயன்படுத்தப்படாமல் நானாவித வைப்பக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

(இ) ரூபா 2,658,051 ஆன தொகை உரிய தரப்பினர் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்படாமல் நானாவித வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2011 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| இறைகளும் வரிகளும் | 5,070 | 2,625 | 5,611 |
| குத்தகை வாடகைகள் | 31,061 | 28,009 | 1,364 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,040 | 1,685 | 28 |
| வேறு வருமானங்கள் | 54,894 | 42,575 | 9,761 |
| மொத்தம் | 92,065 | 74,894 | 16,764 |

### 2.3.2. நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரமத செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டிய பணங்கள் பின்வருமாறுள்ளன.

| | | ரூபா |
|---|---|---|
| i | நீதி மன்ற தண்டப்பணம் | 1,112,950 |
| ii | முத்திரைக் கட்டணங்கள் | 2,894,342 |

### 2.3.3. வருமானக் கடன்பட்டோர்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் மற்றும் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் என்பவற்றின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய காலம் தொடர்பில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 11,010,570 தொகையான வரிகள், வாடகை, அனுமதிப்பட்ட கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

கணக்காய்வுப் பரிசொதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 275,000 பெறுமதியான ஒரு இரு சக்கர உழவு இயந்திரம் 4 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமலோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டோ இருந்தது.

(ஆ) ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 30,430,200 பெறுமதியான மூன்று காணிகள் பயன்படுத்தப்படாமலோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டோ இருந்தது.

### 2.5. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அவசர மற்றும் முழுமையான சாதாரண கடமைகளிற்கு புறம்பாகவுள்ள மற்றும் அலுவல நேரத்தில் பூர்த்தியாக்க முடியாதுள்ள குறிப்பிட்ட வேலைகளிற்காக மாத்திரம் மேலதிக நேர மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவு செலுத்த முடியும். இந்த வெண்டுகைக்கு முரணாக சபையானது ரூபா 53,610 தொகையான மேலதிக நேர மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவு செலுத்தியிருந்தது.

(ஆ) கூட்டங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களிற்கு உணவு வழங்குவதற்காக ரூபா 15,900 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த விடயத்தில் சிக்கன நோக்கமுள்ளதென கணக்காய்வில் கருதப்பட்டிருக்கவில்லை.

**2.6. செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 47,132 தொகையான தீர்க்கப்படாத உத்தியோகத்தர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆயர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காத தனயார் நிறுவனமொன்றிடமிரந்து ரூபா 69,070 பெறுமதியான ஆயர் வேத மருந்துகளை கொள்வனவு செய்திருந்தது.

**2.7. நோக்கங்களிற்கு முரணான நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பொங்கல் விழா கொண்டாடுவதற்காக துரையப்பா மைதானத்திற்கு பொதுமக்கள் போக்குவரத்திற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு ரூபா 10,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் சபை நிதிகளிலிருந்து ரூபா 453,658 தொகை சிற்றூண்டிச் செலவினத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**2.8. சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 சனவரி 28 ஆந் திகதிய பிரீ/01/2009 ஆம் இலக்க வடக்கு மாகாண திறைசேரி சுற்றறிக்கைக்கு முரணாக 2010 ஆம் அண்டிற்காக கைதவிர்புக்குழு உறுப்பினர் சபைக்கு ரூபா 2,500 தொகையான கைதவிர்புக்குழு உறுப்பினர் சபை படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஓட்ட அட்டவணையின்படி 2011.01.06 முதல் 2011.01.09 வரை கொழும்பில் கடமையில் இருந்த போதிலும் குப்பைகளை அகற்றுவதற்காக கேள்வித் தீர்மானம் 2011.01.07 இல் செயலாளரால் கையொப்பிடம்ப்பட்டிருந்ததுடன் குப்பை அகற்றல் கட்டணமாக ரூபா 4,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9. செயலாற்றல்

சபையானது நிதியாண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் எதிபார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் அவற்றின் மீதான முன்னேற்றம் என்பவற்றினை மதிப்பிட முடியாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ). கணக்கீடு
(ஆ). வருமான சேகரிப்பு
(இ). நிலையான சொத்துக்கள்
(ஈ). மனித வளங்கள்
(உ). மானியங்களும் நன்கொடைகளும்
(ஊ). வாகனப் பயன்பாடு
(எ). நானாவித வைப்புக்கள்
(ஏ). பாதீட்டுக் கட்டுப்பாடு